2004 நவம்பர் 22] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

சொன்னார்கள். புகழ்பெற்ற வான்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு வனத் துறையிலிருந்து 100 ஏக்கர், அதாவது 40 ஹெக்டேர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னது போல 168 ஹெக்டேர் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) அவரே சொன்னார். 20 ஆண்டு காலம் அச்சுறுத்திக் கொண்டிருந்த சந்தன மரக் கொள்ளைக்காரன், பல உயிர்களைக் கொன்றவன், வீரப்பனையே அடக்கிவிட்டோம். இதுபோல் சிறு சிறு தவறுகளையும் அடக்கிவிடுவார் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தன மரங்களை நாங்கள் காப்பாற்றுவோம் என்று உறுதி கூறி அமர்கின்றேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடு) நான்கு கேள்விகளையும் ஒன்றாகக் கேட்டுவிட்டீர்கள்; உட்காருங்கள். திரு. கே.என். இலட்சுமணன்.*

முற்பகல் 10-05

திரு. கே.என். இலட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்தேழாவது முதல் இருநூற்று ஐம்பத்து ஒன்றாவது வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம்.*

திரு. ப. இராஜரெத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் திருநாட்டினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரண்டாவது மற்றும் பதிமூன்றாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS